**OS.NO: 117/2024**

**PW 1 :** சதாசிவம் த/பெ. **துக்காராம்**

நாள் : 30.10.2025

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

எனது தரப்பில் மனு தாக்கல் செய்து 2 ஆவணங்கள் குறியீடு செய்துள்ளேன் அதில் ஒன்று எனது தாத்தா அயோத்திப்பிள்ளையின் இறப்பு சான்றிதழ் மற்றொன்று அரக்கோணம் தபால் துறை கண்காணிப்பாளர் எனக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி எனக்கு அனுப்பிய பதில். நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி கோரிய மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மனுவை தாக்கல் செய்தால் தான் என்னால் தாக்கல் செய்யப்பட்ட தகவலுக்கும் மனுவிற்கும் சம்மந்தம் உள்ளதா என்பதை பற்றி முடிவு செய்ய முடியும் என்று சொன்னால் சரிதான். வாதசாஆ.12ன் மூலமாக தான் என் தாத்தா வேலைக்கு சேர்ந்த தேதியை கோரியிருந்தேன் என்று சொன்னால் சரிதான். அதே பதிலில் எனது தாத்தா அயோத்திப்பிள்ளையின் பணிப்பதிவேடு இல்லை என கூறியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.

அதில் அவர் எப்போது ஓய்வு பெற்றார் என்ற கோரிய கேள்விக்கும் பதில் கொடுக்கவில்லை என்று சொன்னால் நான்கு கேள்விகளுக்கும் சேர்த்து ஒரே பதிலை கொடுத்துள்ளார். நான் கோரிய தகவல் 38 ஆண்டுகளுக்கு முன்பு கோரியுள்ளதாக அவை பராமரிப்பில் இல்லை என்ற காரணத்தில் தான் கொடுக்கவில்லை என்று சாட்சி கூறினார்.

நான் கூறுகின்ற விவரம் தவறு என்றும் அவர்கள் அலுவலகத்தில் தேடிப்பார்த்தும் அது சம்பந்தமான தகவல் கிடைக்கவில்லை என்று தான்

கூறியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் 2 ஏக்கர் 12 செண்ட் தனி அத்து போட்டு உள்ளதா என்றால் ஆமாம் அதை என்னால் நிரூபிக்க முடியுமா என்றால் முடியும். அது மணல் பூமி வரப்பு எல்லாம் மழையில் கரைந்து விட்டது.

வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்தால் நான் கூறுகின்ற இடத்தில் அத்து உள்ளதா இல்லையா என்று தெரியவரும் என்று சொன்னால் சரிதான். அதற்கான நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் கூறுவது போல் 2 ஏக்கர் 12 செண்ட் தனியாக அத்து உள்ளதாக கூறுகின்ற விவரம் தவறு என்னும் 4 ஏக்கர் 24 செண்ட் மொத்தமாக தான் கூட்டாக உள்ளது என்று சொன்னால் அது தவறு. வரப்பு மழையில் கரைந்து விட்டதை சாதாகமாக பயன்படுத்தி பிரதிவாதிகள் அத்து இல்லை என்று கூறுவதாக சாட்சி கூறினார்.

நான் கூடுதலாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனக்கு எந்த வகையிலும் உதவி செய்யாது என்றும் தாவா சொத்து எழுமலையின் சுயாஜ்ஜிய சொத்து என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.30 17:24:59 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.